# 05.06.2020 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் மன்றப்பொருள்

**மன்றப்பொருள் 822–05/06/2020**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை சீற்றங்களினாலும், குடிநீர் பணிகளினாலும் சேதமடைந்த சாலைகள் சீரமைப்பதற்கு கீழ்கண்டவாறு உத்தேச திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 3 களக்கோடி தெரு, வார்டு எண்: 16 மவுண்ட் ரோடு நடுப்பேட்டை தெரு, வார்டு எண்: 24 ஐந்துவர்ணம் பெரிய பள்ளிவாசல் தெரு, வார்டு எண்: 25 தெற்கு கீழ மற்றும் மேல கோவிக்கால் தெரு, வார்டு எண்: 31 புலிக்குட்டி விநாயகர் கோவில் தெரு மற்றும் உச்சி மாகாளி அம்மன் கோவில் 1ம் தெரு ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் – 1) | **184.70** |
| 2 | வார்டு எண்: 1 சக்தி நகர், வார்டு எண்: 27 ஆசாத் நகர் மற்றும் வார்டு எண்: 33 புலியூர் தெரு, அண்ணா தெரு மற்றும் நேரு தெரு, பழைய பேரூந்து நிலையம் ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 2) | **198.00** |
| 3 | வார்டு எண்: 18 பொன்னி பாறை தெரு முதல் கொடிமரம் வரை, பொன்னிபாறை தெரு முதல் வேம்படி பள்ளிவாசல் வரை மற்றும் கடையத் தெரு, வார்டு எண்: 27 குலசேகரநாதர் கோவில் தெரு மற்றும் கீழமுத்தாரம்மன் கோவில் தெரு, முடுக்கு விநாயகர் கோவில் தெரு மற்றும் செண்பக விநாயகர் கோவில் தெரு ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 3) | **160.00** |
| 4 | வார்டு எண்: 1 புதிய பேரூந்து நிலையம் (வடக்கு & தெற்கு பகுதி மற்றும் இரண்டு சக்கர வாகனம் காப்பகம் பகுதி) வார்டு எண்: 2 அப்துல்கலாம் நகர் & வார்டு எண்: 6 இரயில்வே பீடர் ரோடு (திருமதி.மஞ்சம்மாள் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி முன்பு) ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 4) | **194.00** |
| 5 | வார்டு எண்: 1 இரயில் நகர், தாய்பாலா நகர், காளிதாஸ் நகர் & அண்ணா நகர் மற்றும் வார்டு எண்: 2 மங்கம்மாள் சாலை (MGR நகர் மற்றும் சூர்யா நகர்) ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 5) | **198.30** |
| 6 | வார்டு எண்: 1 தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, வார்டு எண்: 10 பாறையடி தெரு மற்றும் குறுக்கு தெருக்கள், வார்டு எண்: 30 புதுமனை 1ம் தெரு, வார்டு எண்: 31 USP நகர் மற்றும் வார்டு எண்: 32 உச்சி மாகாளி அம்மன் கோவில் 2ம் தெரு மற்றும் 4ம் தெரு ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 6) | **180.00** |
| | **மொத்தத் தொகை** | **1115.00** |

மேற்படி சாலைப் பணிகளை மேற்கொள்ள நகராட்சியின் நிதிநிலைமை சரி இல்லாத காரணத்தினால் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP) 2020-21 திட்டத்தின் கீழ் முழுதொகையையும் மானியமாக ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதி பெற சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் திட்ட பிரேரணை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்

(1039/2020/இ1)

**மன்றப்பொருள் 821–05/06/2020**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை சீற்றங்களினாலும், குடிநீர் பணிகளினாலும் சேதமடைந்த சாலைகள் சீரமைப்பதற்கு கீழ்கண்டவாறு உத்தேச திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 1 TNHB காலனி, சக்தி நகர், தாய்பாலா நகர் மற்றும் வெல்கம் நகர் ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 1) | **195.00** |
| 2 | வார்டு எண்: 2 மங்கம்மாள் சாலை மற்றும் வார்டு எண்: 32 மைனாபேரி ரோடு ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் (சிப்பம் 2) | **190.00** |
| | **மொத்தத் தொகை** | **385.00** |

மேற்படி சாலைப் பணிகளை மேற்கொள்ள நகராட்சியின் நிதிநிலைமை சரி இல்லாத காரணத்தினால் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு குழுமம் (IUDM) 2020-21 திட்டத்தின் கீழ் முழுதொகையையும் மானியமாக ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதி பெற சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் திட்ட பிரேரணை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:1040/2020/இ1

**மன்றப்பொருள் 823–05/06/2020**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்திற்கு தாமிரபரணி ஆற்றுபடுகையிலிருந்து 5 உறக்கிணறுகள் மூலம் குடிநீர் எடுக்கப்படுகிறது. மேற்படி உறக்கிணறுகளில் முதலாவது உறக்கிணற்றிக்கு புதியதாக மின்மோட்டார் சப்ளை செய்து பொருத்துதல், DI பைப் மற்றும் உதிரிபாகங்கள் பொருத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 824–05/06/2020**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஊர்க்காடு தலைமை நீரேற்றும் நிலையத்திற்கு தாமிரபரணி ஆற்றுபடுகையிலிருந்து 5 உறக்கிணறுகள் மூலம் குடிநீர் எடுக்கப்படுகிறது. மேற்படி உறக்கிணறுகளில் இரண்டாவது உறக்கிணற்றிக்கு புதியதாக மின்மோட்டார் சப்ளை செய்து பொருத்துதல், DI பைப் மற்றும் உதிரிபாகங்கள் பொருத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 825/05/06/2020**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட களக்கோடி தெருவில் உள்ள 3 எண்ணம் சிறுபாலங்கள் மற்றும் மலையான் தெருவில் உள்ள ஒரு சிறுபாலம் மிகவும் சேதமடைந்து கழிவு நீர் ஆங்காங்கே தேங்கி சுகாதரமற்ற நிலையில் உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு களக்கோடி தெருவில் உள்ள 3 சிறுபாலங்கள் மற்றும் மலையான் தெருவில் உள்ள ஒரு சிறுபாலம் ஆகியவை சரி செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ2.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்826/05/06/2020**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேலமாசி வீதியில் (வேன் ஸ்டான்ட் அருகில்) மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து கழிவு நீர் ஆங்காங்கே தேங்கி சுகாதரமற்ற நிலையில் உள்ளது. மேலும் பாறையடி தெருவில் உள்ள சிமெண்ட தளம் மற்றும் மவுண்ட் ரோட்டில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்துள்ளது. எனவே மேற்கண்ட தெருக்களில் உள்ள பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மேலமாசி வீதியில் (வேன் ஸ்டான்ட் அருகில்) மழைநீர் வடிகால் அமைத்தல், பாறையடித் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் மற்றும் மவுண்ட ரோட்டில் உள்ள மழைநீர் வடிகாலினை உயர்த்தி கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ1.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 827–05/06/2020**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்நகராட்சி ஒப்பந்தக்காரர்களால் முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட FSD 1% தொகை மற்றும் AFSD 5% தொகை மற்றும் டம்மி, காலங்கடந்த வைப்புத்தொகை போன்றவற்றை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணபத்தின் அடிப்படையில் தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதியில் உள்ள காலங்கடந்த வைப்புத் தொகையினை ஒப்பந்தகாரருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 828–05/06/2020**

இந்நகராட்சி மூலம் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு தாமிரபரணி குடிநீர் 45 இலட்சம் குற்றாலம் குடிநீர் 17 இலட்சம் வழங்கப்படுகிறது. குடிநீரில் உள்ள கிருமிகள் அழிப்பதற்கு தேவையான கிருமி நாசினி (Gas Cylinder) குளோரின் வாங்குவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 829–05/06/2020**

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான ஊர்க்காட்டில் உள்ள தலைமை நீரூந்து நிலையத்தின் மூலம் மன்னார்கோவில், திருமலையப்பபுரம், மாதாபுரம், மற்றும் தென்காசி ஆகிய நீரூந்து நிலையங்கள் வழியாக இந்நகர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தலைமையிடத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு சீராக குடிநீர் வழங்குவதற்கு புதிதாக 160KVA ஜெனரோட்டர் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ13.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தென்காசி

நகராட்சி

05.06.2020 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண். | மன்றப்பொருள் எண். | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | | | |
| 1 | 1 | 821 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 822 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 823 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 824 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 825 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 826 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 827 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 828 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 829 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |

(ஒம்) க.செ. ஹசீனா

தனி அதிகாரி

தென்காசி நகர்மன்றம்

உண்மை நகல் உத்திரவின் படி

மேலாளர்

தென்காசி நகராட்சி